விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 2 ஐ. ஆகி 4 இதழ் 4
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-2-1986

RECEIVED 14-2-1986 PERIODICALS DIVISION LIBRARY

பருத்தித்துறை முதல் அம்பாறை வரை கடற்பிரதேசம் மட்டுப்படுத்தப்பட்டது

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோர கடற்பிரதேசம், மட்டுப்படுத்தப்பட்டுள்ள பிரதேசமாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து அம்பாறையிலுள்ள பொத்துவில்-கோமாரி செல்லும் இடம் வரையிலான கடற்பிரதேசமே உடனடியாக சனநடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட பிர

(5ம் பக்கம் பார்க்க)

உடன்பாடு ஏற்படவுமில்லை; கூட்டணி மீறவுமில்லை!

'அமிர்' விளக்கம்

[சென்னை]

''இனப்பிரச்னை சம்பந்தமாக இலங்கை-இந்திய அரசுக்கிடையே உடன்பாடு எதுவும் ஏற்படவுமில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி எதனையும் மீறவுமில்லை. இந்தப் பேச்சுக்கே இடமில்லை. சர்வகட்சி மாநாட்டிலும்சரி, திம்பு மாநாட்டிலும்சரி, அண்மையில் அரசிடம் சமர்ப்பித்த யோசனைகளிலும்சரி வடக்கு-கிழக்குஇணைப்பையேகூட்டணி

(8-ம் பக்கம் பார்க்க)

●'ஜீப்'பில்வந்தவர்கள் சரமாரியாகசுட்டனர்

பூவரசங்குளத்தில் பயங்கரம்!

பலர் பலி ஆசிரியர், மாணவர் படுகாயம்!!

(ஏ. லி. மாணிக்கம்)

பூவரசங்குளம் தமிழ் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள மகாராஜா போசனசாலையில் தேநீர்-சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் மீது, வாகனங்களில் ரோந்து சுற்றிச்சென்ற 'கறுப்புடை' தரித்தவர்கள் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், பலர் கொல்லப்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது!

நேற்று பிற்பகல் இப்பயங்கர சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் வவனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் இருவர் மரணமானார்கள்

ஏ எம். குணசேகரா [92 வயது] என்பவர் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இவரது வலது தொடைஎலும்பு உடைந்து விட்டது. சிங்களவரான இவர் பலகாலம் இங்கு வசித்து வருபவர்.

இவரது மருமகனை தம்பையா மகாராஜா [28 வயது] இரு பிள்ளைகளுக்குத் தந்தை. இவர்தான் போஜன சிற்றுண்டிச்சாலை உரிமையாளர். இக்கடையில் வேலை செய்துவந்தவர். ராமசாமி சந்திரதாசன் (19 வயது) இவ்விருவரும் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

ட்ராக்டர், மினிவான், கூட்டுறவுச் சங்க வான், ஜீப் ஆகிய வாகனங்களில் வவனியா முகாமிலிருந்து சிவிலுடையிலும், 'கறுப்'புடையிலும் ரோந்து சென்றவர்கள் சுமார் ஒன்பது மைல் தூரமுள்ள செட்டிகுளம் முகாமுக்குப் போய்விட்டு பூவரசங்குளம் ஊடாக வந்ததாகவும், அப்பொழுது மகாராஜா போசன சாலையை அண்மித்த

[8-ம் பக்கம் பார்க்க]

பிரிட்டிஷ் பெண் வில்லிஸ் விவகாரம்: நிபந்தனையின்றி விடுதலை செய்ய அரசு கோரிக்கை

(கொழும்பு)

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் திருமதி பெனிலோப் வில்லிசை நிபந்தனையின்றியும், மேலும் தாமதமின்றியும் விடுதலைசெய்யுமாறு தேசிய பாதுகாப்பமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கேட்டுள்ளார்.

திருமதி. வில்லிசை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியினரிடம் கையளிப்பதென 'ஈரோஸ்' மேற்கொண்டிருக்கும் முடிவை அரசாங்கம் நிராகரிப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

நால்வர் ஆஸ்பத்திரியில்

(மூதூர்)

மூதூரில்கைது செய்யப்பட்ட இளம்பெண்களில் நான்குபேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது ஒரு பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது

கைதுசெய்யப்பட்டவர்களில் மேலும் 8 இளம் பெண்கள் சுகவீனமுற்ற நிலையில் பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. (மா)

கட்டுவன், குரும்பசிட்டியில் குண்டுத் தாக்குதல்! ஏழுவீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு மேலாக நேற்று நண்பகல் ஹெலிகொப்டர்களிலிருந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் ஏழு வீடுகள் சேதமடைந்தன. ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. பல வீடுகளிலுள்ள கூரைத்தகடுகள். ஓடுகள் உடைந்துகாணப்படுகின்றன.

இத்தாக்குதலில் ஒரு வயோதிப மாதும், ஒரு சிறுமியும் காயமடைந்தனர்.

பாதிக்கப்பட்ட வீடுகளிலிருந்து ஏற்கனவே வீடுகளின் உரிமையாளர் பீதியடைந்து அயல் கிராமங்களுக்குச் சென்றதால் பலரும் உயிர்தப்பினர்.

கிராமப்புற வீதிகளில் குண்டுத் தாக்குதல்களினால் குழிகள் ஏற்பட்டுள்ளன. மா, பலா. கமுகு, தென்னை உட்பட பனை மரங்கள் கூட முறிந்திருந்தன: இக்கிராமங்கள் இப்பொழுது வெறிச்சோடிக் கிடக்கிறது.

9 பேர் பலி

(ராய்ட்டர்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அரசதுருப்புகள் ஒன்பது பொதுமக்களை நேற்று சுட்டுக்கொன்றுள்ளதாக கண்டனிலுள்ள தீவிரவாதக்குழுக்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மூன்று பொலிஸார்கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இது நடந்துள்ளதாம். (இ-செ)

மீனவர்கள் தெய்வாதீனமாக தப்பினர்!

கடற்படையினர் நால்வரை மீட்டனர் பலாலியில் விசாரணை

[ஐ சண்முகலிங்கம்]

குருநகரிலிருந்து மீன்பிடிக்கச் சென்றபோது கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு பலியானார்கள் என்று முன்னர் தெரிவிக்கப்பட்ட ஆறு மீனவர்களில் நால்வர் கடலில் நீந்திச் சென்றபோது கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் கடல் திடல் ஒன்றிலிருந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளார்.

மற்றொருவர் பற்றி எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

குருநகரில் இருந்து கடந்த செவ்வாய் இரவு மீன் பிடிக்கச் சென்றபோது பாலைதீவுக்கும் இரணைதீவுக்கு மிடையில் நடந்த பீரங்கித்தாக்குதலில் படகு சின்னாபின்னமானது. இப்படகில் சென்ற ஏழு

5-ம் பக்கம் பார்க்க)

விமானநிலைய சுற்றுடலில் ஏற்பட்ட பதற்றநிலை!

(மாவிட்டபுரம்)

பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில் இன்று காலை தொடர்ச்சியாககேட்ட வெடிச் சத்தங்களால் அப்பகுதியிலும் சுற்றியுள்ள பகுதியிலும்பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில்

[5ம் பக்கம் பார்க்க]

வவனியாவில் கைதான 10 இளைஞர்கள் விடுதலை

[வவனியா]

கடந்த மூன்றுவாரகாலத்துக்குள் வவனியா ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 10 இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்படவிருந்தனர்.

குறித்த இளைஞர்கள் விடுவிக்கப்படவிருப்பது பற்றி இராணுவ இணைப்பதிகாரி வவனியா அரச அதிபருக்கு அறிவித்திருந்ததையடுத்து அவர்களை பொறுப்பேற்று அழைத்து வருவதற்காக ஒரு அதிகாரியை அரச அதிபர் தச்சன்குளம் ஆயுதப்படை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார். விடுவிக்கப்படும் இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:

குமாரசாமி கமலாநந்தன், நிர்மால்பியதாஸ, அமில்தீன், துரைச்சாமி பாஸ்கரன், தங்கவேலு நாராயணமூர்த்தி, கோபால் புவனேஸ்வரன், சுப்பிரமணியம் சந்திரகுமார், வேலுப்பிள்ளை ராஜரத்தினம், கந்தையாசிறீதரன், [illegible] அருள்நேசன்.

"படகு எரிந்து மூழ்கியது! மற்றவர்கள் கதி பற்றித் தெரியாது"

[தேவா]

''நாங்கள் ஏழுபேர் ஒரு படகில் இரவு பதினொரு மணியளவில் பாலைதீவுக் கடலில் சென்று கொண்டிருந்தபோது எமக்குப் பின்னால் ஒரு கடற்படைப் படகு வந்துகொண்டிருந்ததைக் காணவில்லை''

பாலைதீவுக்கடலில் பீரங்கித் தாக்குதலுக்குள்ளான படகில் சென்றவரும், தெய்வாதீனமாக உயிர்பிழைத்தவருமான செபஸ்தியன் கெனடி தமது, பயங்கர அனுபவம் பற்றி 'ஈழ

(5-ம் பக்கம் பார்க்க)

அரி விளம்பரம்

விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழி புறேயிலர் (Broilers) வேறு இனங்களும் விற்பனை ஆகிறது. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: அண்ணு பாம் செம்மாதெரு, ஜூம் மா மொஸ்க்லேன், யாழ்ப்பாணம். A 237

சென்லூட் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக் குண்டு. தொடர்பு; நியூ குகானந்த பவன், தட்டாதெரு சந்தி, தேனீர்க்கடை, யாழ்ப்பாணம். [C 722]

ரொபி, இனிப்பு வகைகள் செய்யும் அச்சு, மெசின், தளபாடம் விற்பனைக்கு உண்டு. மே/பா தி. விக்னேஸ்வரன் விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு. C 733

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Show case, எழுது மேசைகள், சாய்வுநாற்காலிகள் TeaTrolley Spray Gun, வெளியூர் கிளாஸ் வகைகள், Pyrex, கோப்பைகள், எவர் சில்வர் பித்தளைப் பாத்திரங்கள், Gas cooker. மின் ஸ்திரிகைகள், மின்விசிறிகள். எலக்றிக் அவன், Hot plate. மற்றும் துணிவகைகள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி வடக்கு மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில். [C749]

மணப்பந்தல்

பிராமண குல 23 வயது இளைஞனுக்கு மணமகள் தேவை. ஜாதகப் பொருத்தமும் சீதனமும் ஓரளவு எதிர்பார்க்கப்படும். தொடர்பு: க. சி. சர்மா, D-10, உருத்திரபுரம், கிளிநொச்சி. C 729

வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ அன் ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைண்டிங் - புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன மிகக் குறைந்த கட்டணம். சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு; VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 740

கட்டிடப் படம் வரைஞர் (டிரான்மென்சிப்) ரிபிறிக்கேஷன் அன் ஏயர்கொண்டிஷன், Quantity Surveying, எலக்ரிக்கல் வயரிங், ரீ. வீ அன் றேடியோ தொழில் நுட்பம், தமிழ், ஆங்கில தட்டச்சு. சுருக்கெழுத்து, Spoken English ஆகிய பயிற்சி நெறிகள் 14-02-86ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு: பதிவாளர் Institute of Technical Studies, பழைய டிஸ்பென்சரி முன்பாக, வட்டுக்கோட்டை. C 747

B.A, G.A.Q. - புவியியல் ஆசிரியர் குணராசாவின் புவியியல் விரிவுரைகள் 15-02-86 ஆரம்பமாகின்றன: 82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [C748]

CLASSES

Special English classes, two streams; one for "O": Level and the other for Beginners by a teacher experienced in teaching for foreign embassy staff. Limited accommodation - Apply before 1st March. Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely Jaffna. C 730

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

For Sale
LATEST MODEL JVC GX. 59C CAMERA
Peformance (Auto Zooming) (Two Speed)
Auto White Balance
and NATIONAL N V 100 PORTABLE DECK
Tele Corner,
MODERN MARKET, CHAVAKACHCHERI.
(C 697)

எவர் விஷன்

★ உங்கள் மங்கள வைபவங்களை என்றும் நினைவில் நிறுத்திக்கொள்ள,
மிகக்குறைந்த ஒளியிலும் தெளிவான காட்சிகளைப் படமாக்கிக்கொள்ளும் கம்யூட்டர் முறையில் இயங்கும் இவ்வருடத்தில் வெளியான நவீன மொடல், வீடியோ கமெறாவால் படம்பிடித்துக் கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள்.
★ அத்துடன் T. V., வீடியோ டெக் என்பவற்றையும் பழுது பார்ப்பதற்கும்.
★ புதிய, பழைய வீடியோ படங்களையும் வாடகைக்கு தரமான பிரதியில் பெற்றுக்கொள்வதற்கும் நாடுங்கள்.

எவர் விஷன்
136, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடிச் சந்தி,
யாழ்ப்பாணம். (C 738)

தேவை

மசி - பெர்குசன் உழவுயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதில் 20 வருட அனுபவமுடையவருக்கு வேலை தேவை. தொடர்பு: விளம்பர இல. C 737 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 737

ஓராண்டு நினைவஞ்சலி

துரைராசா இலங்கேஸ்வரன்
(பாபு)

மலர்வு: 26-10-1961
உதிர்வு: 25-02-1985

எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்கமாக விளங்கி பூமித்தாயின் மடியில் ஊனுடலைத் துறந்து உயர் பசவி அடைந்த உத்தமனே உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்
அம்மா, அப்பா,
சகோதரர்கள்,
சகோதரிகள், அக்கா,
அத்தான்,
மருமக்கள், உற்றார்,
உறவினர்கள்,
நண்பர்கள்.
C 745

முதலாண்டு நினைவு அஞ்சலி

திரு. சி. வாசுதேவன்

பிறப்பு: 21-06-1964
இறப்பு: 26-02 1985
திதி: 14-02-86
(வெள்ளி)

ஆலமரம் போல் அனைவருக்கும் உதவி புரிந்து அகாலத்தே ஈசனடி சேர்ந்த அன்பிற்குரியவனே எங்கள் நெஞ்சில் உன் நினைவு எப்போதும் இருக்கும்.

பெற்றோர்கள்,
சகோதரர், மைத்துனன்.
''சங்குதரை''
வேலணை கிழக்கு,
வேலணை. C 742

கூறுவிலை கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்தவற்குத் தரமான பிரதேச உற்பத்திகள் தேவைப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் 'பொது முகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு உடன்விலை விபரம், மாதிரியுடன் தொடர்புகொள்ளவும் எமது முன்னைய கூறுவிலை கோரல்' விளம்பர முடிவுத் திகதி 14-02-86ல் இருந்து 25-02-86ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

1. வடகம்
2. மோர்மிளகாய்
3. ஊறுகாய்
4. அப்பளம்
5. அரிசி மா
6. நல்லெண்ணெய்
7. இடியப்ப உரல்
8. குரக்கன் மா.

மற்றும் ஏனைய பிரதேச உற்பத்திகள்.

பொதுமுகாமையாளர்.
பனை அபிவிருத்திச்சபை.
[A240]

ஓராண்டு நினைவஞ்சலி

சண்முகராஜா பிரபாகரன்

மண்ணிலே: 25-01-1963
விண்ணிலே: 13-02-1985

என் அன்பு மகனே!

புறநானூறு காட்டும் வீரப்பண்போடு வீரமரணம் அடைந்திருக்கின்றாய். இப்பெருமையோடு நாம் ஆறுதல் அடைகிறோம். உன்னை ஈன்றோர்க்கும், உடன் பிறப்புகளுக்கும் இப்படி ஒரு ஆறுதல் சொல்வதேயன்றி நாம் என்ன செய்ய. நீ உனது இரத்தக்கறையை மண்ணில் விட்டாய் அன்றில் இருந்து இன்றுவரை எமது நெஞ்சங்களின் குமுறல்களை நீ யறியாயோ. நீ சிந்திய இரத்தம் இம்மண்ணுடன் கலந்து ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சங்கள் இன்றும் உனக்காக இரத்தம் சிந்துகிறதடா உனது ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்.

அம்மா, ஐயா,
சகோதரர்கள்,
அப்பப்பா: அம்மம்மா,
பெத்தா, உறவினர்கள்,
நண்பர்கள்.

720, ஏகாம்பரம் வீதி,
உப்புவெளி,
திருகோணமலை
[C 723]

தெல். துர்க்காதேவி இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி அம்பாளுக்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் 23 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இலட்சார்ச்சனை நிகழவுள்ளது.

மாசிமக இலட்சார்ச்சனையாக மாசி மகத்திற்கு முதல் பத்து நாட்களும் நியாசம் தீபாராதனை அர்ச்சனை ஹோமம் வேத - திருமுறைப்பாராயணங்கள் என்னும் சிறப்புக் கிரியைகளுடன் இவ்விட்சார்ச்சனை வழிபாடு நடைபெறவுள்ளது.

11 ம் நாளாகிய 24 ம் திகதி திங்கட்கிழமை மாசி மக நன்னாளில் 81 கலச ஸ்நபனாபிஷேகம், ஸ்வர்ண பத்ம புஷ்ப் பார்ச்சனை வீதியுலா என்பன நிகழும்.

நாட்டில் தற்போது நிகழும் பதற்ற நிலைமாறி அமைதி நிலை உண்டாக வேண்டும் என்னும் பிரார்த்தனையுடனேயே ஸ்ரீ துர்க்காதேவிக்கு இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது. [ப]

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
மயிலு கந்தையா
(அச்செழு)

ஆண்டவன் படைப்பு:
20-5-1927
ஆழ்பவன் பறிப்பு:
15-01-1986
திதி: 14-02-1986

ஆலமரமாய் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பரந்த நிழலாய் அவனியில் பவனிவந்த எங்கள் அன்பின் திருவுருவே! எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்களின் நினைவிருக்கும்.

எதிர்பாராத விதமாக காலன் எங்களிடமிருந்து இவ்வளவு சீக்கிரமாக பிரித்துக் கொண்டான். ஆனல் நீங்கள் மறைந்து 31 நாட்கள் ஆகியும் நினைவு பசுமையே! உங்கள் பிரிவால் வாடி உங்கள் அன்புமுகத்தைக் காணுமல் மிகவேதனையுடன் நினைவு கூர்ந்து தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சென்ற 15-1-86ல் எமது இல்லத்தில் இடம்பெற்ற இறுதிக்கிரிகைகளின் போது அனுதாபச்செய்தி மூலமும் நேர்முகமாகவும் ஆறுதல் கூறிச்சென்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துத்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி, குடும்பத்தினர்.
C 754

வளைகுடாப் போர் நீடிக்கிறது

பாதுகாப்புச் சபையைக் கூட்டக் கோரிக்கை

யுத்தம் பரவும் அபாயம்!

(லண்டன்)

ஈராக்கும் அதன் நேச நாடுகளும் வளைகுடா யுத்தம்பற்றி விவாதிப்பதற்கும், அதை நிறுத்தவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐ நா.சபையின் பாதுகாப்புச்சபையைக் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகதாத்தில் நடைபெற்ற மத்திய கிழக்கு வெளிநாட்டமைச்சர்களின் அவசரக் கூட்டத்தையடுத்தே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சவூதி அரேபியா உட்படப் பல்வேறு மத்திய கிழக்கு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே, வளைகுடாப் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்கள், ஈராக் அல்ஃபால் பிரதேசத்தில் கடும் யுத்தம் நடைபெறுவதையும், ஈரான் பல இடங்களில் முன்னேறியிருப்பதையும் காட்டுகின்றன.

இது இவ்வாறிருக்க, யுத்தத்தின் பெறுபேறுகள் குறித்து இரு நாடுகளும் பல முரண்பட்ட கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

ஈரான் இந்த வளைகுடா யுத்தத்தில் முதன் முதலாக வளைகுடா நீர்ப் பிரதேசத்தை ஈராக் அடையமுடியாமல் தனது படைகள் செய்திருப்பதாகக் கூறியுள்ளது.

தனது படைகள் ஷட் அல் அராப் நீர்ப்பகுதியைக் கடந்து அதன் தென்புறத்திலுள்ள அல்ஃபால் துறைமுகத்தையும் பிடித்து குவைத்துடனான ஈராக்கின் எல்லைப் பிரதேசத்துக்கருகில் வந்துவிட்டதாகக் கூறுகிறது.

ஈராக் இதனை மறுத்துள்ளது.

ஷட் அல் அராப் பகுதியை ஈரான் கடந்துவிட்டதென்றும் அல்ஃபால் துறைமுகப் பகுதியில் ஈரானிய படைகளுக்குக் கடும் சேதத்தைத் தனது படைகள் விளைவித்ததாக ஈராக்கிய இராணுவ செய்தியொன்று கூறுகிறது.

செய்மதிப் படங்களின்படியும் இந்தத் துறைமுகப் பகுதி இன்னமும் ஈராகின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே வளைகுடா யுத்தம் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பரவுமானல் அது தனது நலன்களுக்குப் பாதகமாகவிருக்கும் எனக்கூறியிருக்கும் அமெரிக்கா, வளைகுடாப் பகுதியில் நிலைகொண்டுள்ள தனது கடற்படையின் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. [செ]

உலகச் செய்திகள்

உணவுத் தட்டில் சீவிய தலை!

[ராய்ட்டர்]

புராதன சீன சடங்கினுக்குப் புத்துயிரளிக்கின்ற ஒரு விசித்திரமான முயற்சியில், தனது உணவுத் தட்டில் ஒரு வயோதிபரின் தலையைச் சீவி வைத்துச் சாப்பிட முயன்றிருக்கிறார் ஒரு வாலிபர்!

கிழக்கு கரகானிலுள்ள சீன உணவு விடுதிக்குள் நுழைந்த 27 வயதான சீன வம்சாவளி இளைஞர் செங் யான் லின், விடுதி அறையிலிருந்த 75 வயதான வயோதிபரின் தலையைச் சீவித் தனது உணவுத் தட்டில் வைத்துவிட்டு, போதாக்குறைக்கு அந்த மனிதரின் கைவிரல்களையும் நறுக்கியெடுக்க முயன்ற தருணத்திலேயே அந்த வயோதிபரின் மகன் குறுக்கிட்டு இளைஞனைத் தடுத்து நிறுத்தியதுடன், பொலிஸாரையும் அழைத்தார்.

தான் வேலைசெய்த உணவு விடுதியினது சுவரில் தொங்கும் புராதன கீழைத்தேய ஓவியமொன்றினை அடிக்கடி பார்த்ததால், தலையைச் சீவும் புராதன சீனச் சடங்கினுக்குப் புத்துயிர் கொடுக்கும் ஆசை தனக்கு ஏற்பட்டது என அந்த இளைஞர் பொலிஸாரிடம் கூறினாராம்

விடுதலையாகிய யூதரின் குடும்பமும் நாட்டைவிட்டு வெளியேற அனுமதி?

[மாஸ்கோ]

விடுதலை செய்யப்பட்ட யூதரான அனடோலிஷாரன்ஸ்கியின் குடும்பத்தினரும் சோவியத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படக்கூடுமென மேற்கத்தைய ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்கு மேற்கு உளவாளிகளின் பரிமாற்றம் நடந்தது. அதிலே கிழக்கின் சார்பில் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஷாரென்ஸ்கியும் ஒருவரென்பதும் தெரிந்ததே!

இதனைத் தொடர்ந்தே தற்போது இஸ்ரேலில் உள்ள திரு. ஷாரென்ஸ்கியுடன் சேர்ந்துகொள்ள அவரது தாயாருக்கு ஒரு மாதத்திற்குள் விஸா அளிக்கப்படலாம்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே இஸ்ரேலில் பத்திரிகையாளரிடையே பேசிய திரு. ஷாரன்ஸ்கி, சோவியத் யூனியனில் தான் சுமார் 400 நாட்கள் தனிப்பட்ட சிறையொன்றில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். [செ]

தென்னாபிரிக்காவில் இருவர் பலி!

[கேப்டவுன்]

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வன்செயல்களின்போது ஒரு இராணுவ வீரரும், தடைசெய்யப்பட்டுள்ள ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் தென்னாபிரிக்காவின் பொட்ஸ்வானா எல்லைப் பிரதேசத்திற்கருகில் நடைபெற்றுள்ளன. [செ]

ஹெய்ட்டித் தீவின் அவசர நிதிக் கோரிக்கை

[ராய்ட்டர்]

கரிபீயத்தீவான ஹெய்ட்டியில் பதவியேற்றுள்ள புதிய அரசாங்கம் நாட்டைப் பொருளாதார வங்குரோத்திலிருந்து காப்பாற்ற இரண்டு கோடி டாலர்களைத் தருமாறு அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைக் கேட்டுள்ளது.

ஹெய்ட்டி தீவின் முன்னைய ஜனாதிபதி டுவாலியர், அவருக்கெதிராக வெடித்த கலகங்களை அடுத்து நாட்டைவிட்டு வெளியேறினர். அவர் நாட்டை விட்டு வெளியேறும்போது சுமார் 40 கோடி டாலர்களை தன்வசம் எடுத்துச்சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இப்போது பிரான்ஸ் நாட்டில் தற்காலிகமாகத் தங்கியுள்ளார்.

இதனிடையே லைபீரியா, தனது நாட்டில் திரு. டுவாலியருக்கு அரசியல் புகலிடம் அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என வெளிவந்த தகவல்களை நிராகரித்துள்ளது. [செ]

பதவிஉயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மின்சாரப் பகுதியில்கடந்தஆறுவருடமாக மின் முகாரியாகக்கடமையாற்றிய திரு. தி ஜெகநாதன் மின் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்று தொடர்ந்தும் கடமையாற்றி வருகிறார்.

சொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த திரு. திருமதி தியாகராஜாவின் புதல்வரான இவர், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவராவார் இவர் தமது ஓய்வு நேரங்களில் சமய, சமூகப்பணிகளில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

குற்றவாளிக் கூண்டில் குருவின் சிஷ்யைகள்

[ராய்ட்டர்]

குருபகவான் ரஜனீஷின் முன்னாள் அந்தரங்கச் செயலாளர் ஆனந்த் ஷீலா உட்பட ரஜனீஷின் மிக நெருங்கிய பெண் உதவியாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் போர்ட்லண்டில் ஆரம்பமாகியுள்ளன.

மேற்கு ஜெர்மனியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்கள் கடந்த வாரம் அங்கிருந்து ஒரிகனுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

இந்தியாவிலுள்ள பரோடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷீலாமீது சட்டவிரோத திருமணங்கள் முதல் கொலைஎத்தனிப்புவரை 32குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸ் பெண்மணியான தயானு இவோன் (ஆனந்த பூஜா, ஆஸ்திரேலியப் பெண்மணி ஜேன் போல் எல்ஸர் (ஷாந்தி பத்ரா) ஆகிய மற்றிரு ரஜனீஷின் உதவியாளர்கள் மீது ஒரு டாக்டரைக் கொலைசெய்ய முயன்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பரில் தாம் குற்றவாளியென ஒப்புக்கொண்ட குரு ரஜனீஷ் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டமையும், நேபாளத்திலுள்ள தனது ஆசிரமங்களில் ஒன்றுக்குச் சென்றுள்ளமையும் தெரிந்ததே.

ஹொங்கொங் இந்தியர்களின் எதிர்காலம் ஊசலாடுகிறது!

(ராய்ட்டர்)

ஹொங்கொங்கிலுள்ளஇந்தியர்கள் தமது நிச்சயமற்ற ஒரு எதிர்காலம் பற்றிப் பீதிகொண்டுள்ளனர்.

1997-ல் ஹொங்கொங்கை பிரிட்டன் சீனாவிடம் கையளிக்கின்ற வேளையில்அங்குள்ள இந்தியர்களின் பிரஜாவுரிமை 'காற்றில் பறக்கின்ற' அபாயம் ஏற்பட்டுள்ளதாக இந்திய வர்த்தக சபைத் தலைவர் கரி ஹரிலால் தெரிவித்துள்ளார்.

ஹொங்கொங்கில் இருக்கின்ற ஏறத்தாழ 6,000 இந்தியர்கள் ஏற்கனவே பிரிட்டிஷ் பிரஜை அந்தஸ்தைப் பெற்றவர்கள். ஆனால் இவர்களுக்கு பிரிட்டனில் வசிக்கும் உரிமை இல்லை.

'நிஜத்தில், பிரிட்டனே எம்மைப் பொறுப்பேற்க வேண்டும். பல இந்தியர்கள் இங்கு தலைமுறை தலைமுறையாக பிரிட்டிஷ் பிரஜைகளாக வாழ்ந்து வருபவர்கள். அவர்களுக்குப் பீகிங்கை விட லண்டனுடனேயே நெருக்கம் அதிகம். இந்தியர்களாகிய நாம் பிரிட்டனின் பொறுப்பேயன்றித் தமது பொறுப்பல்ல என்பதைப் பீகிங் தெளிவாகக் கூறியிருக்கிறது' என்று ஹரிலால் கூறுகிறார்.

கடந்த ஆண்டு செய்யப்பட்ட சீன-பிரிட்டிஷ் உடன்படிக்கையின் கீழ் 1997-க்குப் பின்னர் சீன வம்சாவழியினருக்கு மட்டுமே சீனப் பிரஜாவுரிமை வழங்கப்படவுள்ளது.

கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

பேராசிரியர் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு நாளை சனிக்கிழமை பகல் 1 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நினைவுச் சொற்பொழிவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி உரையாற்றுவார். இதனை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

(ஐ)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல்:

வாக்குக் கணக்கெடுப்பு மீண்டும் ஒத்திவைப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைக் எண்ணும்பணியை, பிலிப்பைன்ஸ் தேசிய பாராளுமன்றம் மூன்றும் தடவையாகவும் நேற்று பிற்போட்டது.

தேர்தல்முடிவுகள் அடங்கிய 124 காகித உறைகளில் 96 உறைகள்உருக்குலைந்து காணப்பட்டதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதனிடையே அமெரிக்காவிலுள்ள சில பிலிப்பைன்ஸ் பிரஜைகளின்குழுக்கள், மார்க்கோஸின் பிற்போக்குத்தனமான அரசாங்கத்துக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும்எனக் கேட்டுள்ளன. [செ]

மணிவாக்கு

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

— குறள்

நமது நோக்கு

சுமுகத்தீர்வுக்குப் புதிய சூழ்நிலை உதவுமா?

“இராணுவத் தீர்வு கிடையாது இந்திய முயற்சியையே நம்புகிறோம்.’’

புதன்கிழமை ‘ஈழநாடு’ இதழின் முதல்பக்க தலைப்புச் செய்தி இது!

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு பெர்னாட் திலக்கரத்ன இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து மேற்படி உறுதிமொழியை வழங்கிய செய்தி அது.

அன்றைய எமது ஏட்டின் அதே முதல் பக்கத்தில் வெளியாகியுள்ள இன்னொரு செய்தியின் தலைப்பு ‘‘இராணுவத்தீர்வு - அரசியல் தீர்வு: இணைகோடுகளாகச் செயல்படும்’’ என்பதாகும். துக்ளக் பத்திரிகையின் ஆசிரியரும். சட்டத்தரணியும் அரசியல் பிரமுகருமான ‘சோ’வுக்கு இலங்கை ஜனாதிபதி வழங்கிய பேட்டியின் போது வெளியிட்ட கருத்து இது!

‘‘இராணுவத்தீர்வுகிடையாது இந்திய மத்தியஸ்தத்தையே விரும்புகிறோம்’’ என இந்திய அரசிடம் இலங்கைத் தூதுவர் உறுதியளித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில் ‘‘இராணுவத்தீர்வும் அரசியல் தீர்வும் ஒரே சமயத்தில் செயற்படும்’’ என நாட்டின் ஜனாதிபதியே கருத்துவெளியிடுகிறார் என்றால் யாரை யார் நம்புவது?

‘‘தொட்டிலையும் ஆட்டிக் கொண்டு பிள்ளையையும் கிள்ளிவிடும்’’ இந்த ஓர வஞ்சனையான செயலினால் ஒருபோதும் இனப்பிரச்னை என்ற குழந்தை உறங்கப் போவதில்லை.

முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழ் இனத்தவர்கள் சிங்களத் தலைவர்களை நம்பிக்கெட்டார்கள். அதன் விளைவையே இன்று பார்க்கின்றோம் இதற்குப் ‘பயங்கரவாதம்’ என சாயம்பூசி உலகை ஏமாற்ற முயற்சி செய்யப்படுகின்றது.

இதே நடைமுறையை அண்டைய நாடான இந்தியாவிடமும் கடைப்பிடிக்க முயல்வதாயின் அதுபெரும் அனர்த்தமாகவே முடியும் என பல சந்தர்ப்பங்களிலும் நாம் இப்பத்திகளில் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

இலங்கை இனப்பிரச்னைச் சிக்கலை சுமுகமாக தீர்த்து வைக்க இந்திய அரசு மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் காலத்திலிருந்தே பல வழிகளிலும் முயன்று வந்துள்ளது.

சர்வகட்சி மாநாடு, திம்பு மாநாடு, டில்லி மாநாடு என உயர்மட்ட முயற்சிகள் மட்டுமன்றி வேறு பல இரகசிய நடவடிக்கைகள் மூலமும் இந்தியஅரசு இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது. இவை அனைத்தையும் நவீன ஆயுதக்கொள்வனவிற்கும் ராணுவப் பயிற்சிக்குமான சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்ப் பிரதேசங்களில் பல்லாயிரக் கணக்கான சிங்கள ராணுவத்தினரைக் குவித்து வைத்துக்கொண்டு ‘‘ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்தும்’’ தந்திரத்தை இலங்கை அரசு பிரயோகித்து வருகிறது.

இன்னொரு வகையில் சொல்வதானால்: ‘‘உனக்கும் பே!.பே! உன் அப்பனுக்கும் பே!,பே!’’ என தமிழ் நாட்டில் கூறுவது போல் இந்திய அரசையே ‘பே’க்காட்டிவிட்டு தமிழர் பிரச்னையை ராணுவத்தைக்கொண்டே தீர்த்து விடலாம் என மனப்பால் குடிக்கிறார்கள் எனலாம்.

பாகிஸ்தானுடனும், இஸ்ரேலுடனும் மற்றும் இந்தியாவுடன் பகைமைப் போக்குள்ள நாடுகள் யாவற்றுடனும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி தமிழர் பிரச்னையில் அவர்களின் தலையீட்டையும் வலிய வரவழைத்துக்கொண்டு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நட்பு முறையில் தலையிட்டு உதவ முன்வந்துள்ள இந்தியாவுக்கே தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் மறைமுகமான பகைமைப் போக்கை இலங்கை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டமையை இந்தியா உணரத் தொடங்கிவிட்டது.

அதன் விளைவுதான் மாலைதீவில் பாரதப் பிரதமர் வெளியிட்ட கருத்து. ‘‘எங்கள் உதவி வேண்டாமென்றால் நேரடியாகச் சொல்லிவிடட்டும்’’ என்று குறிப்பிட்டார்.

அதையடுத்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் ஏதேதோ ராஜீய நடவடிக்கைகள் நடைபெற்று வருவதை அவதானிக்கின்றோம். இதே வேளை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பகத் அமெரிக்கத் தலைவர்களையும் இலங்கை விடயமாகக் கலந்தாலோசித்து விட்டுவந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

எதுவானாலும் அன்றாடம் தமிழ் மக்கள் ஆயுதப் படையினரின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளால் படுகொலைக்குள்ளாவதை உடன் நிறுத்தவும், அமைதிச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளும் ஒரு முடிவினைக் காண்பதற்கும் இந்தப் புதிய சூழ்நிலை உதவ வேண்டும்.

பிரஜைகள் குழுவுக்கு புகார்

(திருமலை)

திருமலைக்கு உப்பு ஏற்றி வந்த லொறியிலிருந்து கடந்த வருடம் டிசம்பர் 24 ம் தேதி இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்ட சாரதி கிளினர் ஆகியோருக்கு என்ன நடந்ததென்பது மர்மமாகவே உள்ளது.

திருமலை செல்வசந்நிதி ஸ்ரோர்ஸ் உரிமையாளரான மு. வேலுப்பிள்ளை திருமலை பிரஜைகள் குழு தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் தனது வர்த்தக நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட லொறி, யாழ்ப்பாணத்திலிருந்து உப்பு ஏற்றி வரும்போது திருமலையிலிருந்து நான்கு மைல்களுக்கப்பால் முற்றாக எரிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ. மு. எழுத்தாளர்
சங்க வளர்ச்சியில்
பேராசிரியர் கைலாசின் பங்கு!

நாளை சனிக்கிழமை யாழ். வளாகத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தால் நடாத்தப்படும் கைலாசபதிநினைவுச் சொற்பொழிவையொட்டி நீர்வை பொன்னையனால் எழுதப்பட்ட இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

“கலை இலக்கிய ஆய்வுத் துறையில் நண்பர் கைலாசபதி ஒரு விஞ்ஞான பூர்வமான கோட்பாட்டை முன்வைத்தார். அதாவது கலை இலக்கியத்தை இயங்கு இயல்பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்துடன் அணுகுவதுதான் அக்கோட்பாடு. அத்துடன் அவரது இலக்கியக் கோட்பாடு யதார்த்த வர்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இதே கோட்பாட்டைத்தான் இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சார்ந்த நாம் தமிழ்நாட்டில் முன்வைத்தோம். அன்று எமது இந்தக் கோட்பாட்டிற்கு தமிழ்நாட்டில் அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஆனால் இதே கோட்பாட்டை தமிழ்நாட்டில் கைலாசபதி வைத்தபொழுது இதற்கு அங்கு அங்கீகாரம் கிடைத்தது. இதன்பின்புதான் எமது இலக்கியக் கோட்பாட்டிற்கு தமிழ்நாட்டில் அங்கீகாரம் கிடைத்தது.’’

இவ்வாறு. பாரதி நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள ஈழம் வந்திருந்த துரைப் பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் எஸ் இராமக்கிருஷ்ணன் டம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் நடந்த இலங்கை எழுத்தாளர் கலந்துரையாடல் சந்திப்பின்போது கூறினார். இதேகருத்தை அவர் கைலாசபதி ஞாபகார்த்தக் கூட்டத்திலும் வற்புறுத்திக் கூறினார். இக்கூற்றை அவருடன் வந்திருந்த இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச்சேர்ந்த நண்பர் சிதம்பர ரகுநாதனும் அனுசரித்துக் கூறினார். டாக்டர் எஸ். இராமக்கிருஷ்ணனின் இக்கூற்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. ஏனென்றால் நண்பர் கைலாசபதி இ மு. எ சவின் முக்கிய உறுப்பினராக இருந்து செயலாற்றிவந்ததுடன் இ. மு. எ. ச. வின் பெரும்பான்மயான உறுப்பினர்கள் இந்த விஞ்ஞான பூர்வமான கோட்பாட்டின் அடிப்படையில் கலைஇலக்கியத்தை அணுகி தமது படைப்புக்களைச் சிருஷ்டித்துவருகின்றார்கள்.

திரு. கைலாசபதி அவர்கள் இ மு. எ. ச.வின் கோட்பாடுகளை வகுப்பதிலும் அதை நடைமுறைப் படுத்துவதிலும், இ. மு எ. ச.வைக்கட்டி எழுப்புவதிலும் பெரும் பங்காற்றியுள்ளார் என்பது நாடறிந்த உண்மை. அவர் தினகரன் பத்திரிகையில் கடமையாற்றிய காலத்திலும், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தபொழுதும், யாழ். வளாகத்தின் தலைவராக இருந்த பொழுதும் இதேநிலைப்பாட்டில் உறுதியாக இருந்து கலை இலக்கிய ஆய்வுகளைச் செய்ததுடன் இ. மு. எ. ச.வையும் வழிநடத்தபெரிதும் சேவையாற்றியுள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு வீரகேசரி, தினகரன் போன்ற தேசிய பத்திரிகைகள் இடமளித்து, அவர்களுக்கு சன்மானமும் வழங்க வேண்டும் என்று இ. மு எ. ச. போராட்டம் நடத்திய பொழுது, திரு. கைலாசபதி ஆசிரியராக இருந்ததினகரனில்

நீர்வை பொன்னையன்

இடமளித்து முன்னோடியாக இருந்ததுடன் பல இலக்கிய விவாத அரங்குகளுக்குக் களம் சமைத்துக் கொடுத்ததுடன் இலங்கை எழுத்தாளர்கள் பல பரிசோதனைகளை இலக்கிய சிருட்டிகளில் நடத்துவதற்கும் வழிவகுத்துக் கொடுத்துள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை நூலுருவில் கொண்டு வருவதற்கு இ மு எ ச. எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தை நிறுவுவதற்கும், நூல்களை ஆய்வு செய்து தெரிவு செய்து பதிப்பிப்பதில் திரு. கைலாசபதி பெரும்பங்காற்றியுள்ளார்.

இ.மு எ.சவின் குரலான ‘புதுமை இலக்கியம்’ இதழை ஆரம்பித்து தொடர்ந்து நடத்துவதில் முன்னின்றுழைத்துள்ளார் அத்துடன் ‘புதுமை இலக்கியம்’ மலர்களில் வெளியிடுவதற்கு பல ஆழமான காத்திரமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவழங்குவதில் அவர் முன்னணியில் நின்றுள்ளார்

*1961*ஆம் ஆண்டு இ.மு எ ச இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முன்னெப்பொழுதும் நடந்திராத தமிழ் எழுத்தாளர் மாநாட்டை கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடத்தியது. இந்த மாநாட்டில் இலங்கையின் சகல பகுதிகளிலுமிருந்து எழுத்தாளர்கள்கலந்துகொண்டனர். ‘தேசிய இலக்கியம்’ என்றகோட்பாடு இ மு எ சவினால் இந்த மாநாட்டில் முன்வைக்கப்பட்டது இக்கோட்பாட்டை இ மு.எ.ச வகுப்பதில் நண்பர் கைலாசின் பங்கு அளப்பரியது. இக்கோட்பாட்டை சகலரும் புரிந்துகொள்ளும்வகையில் எளிமையாகவும், சகலரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தர்க்கரீதியாகவும் முன்வைத்தவர்களுள் நண்பர் கைலாசபதி முன்னணியில் நின்றுள்ளார்.

1963 ஆம் ஆண்டில் இ மு. எ. ச. இரண்டாவது தேசிய மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இந்தமகாநாட்டில் இ. மு. எ. ச ஜனநாயக யதார்த்தவாதக் கோட்பாட்டை முன்வைத்தது. இந்தக்கோட்பாட்டை இ மு எ ச. வகுப்பதற்கும் கைலாசபதியின் பங்கு அளப்பரியது

ஆறுமுகநாவலர் பற்றி இ மு. எ. ச. ஒருபுதியகண்ணோட்டத்தை முன்வைத்தது. நாவலரின் பணி சைவத்திற்கும், தமிழுக்கும் மட்டும் தான் என்று குறுகியவட்டத்திற்குள் அவரை வைத்திருந்தனர். இ மு எ. ச. நாவலரின் மறுபக்கத்தை தமிழ்மக்கள் முன் கொணர்ந்து காட்டியது. அதாவது ஆறுமுகநாவலர் அந்நிய கலாச்சார ஊடுருவலுக்கு எதிராகவும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் போராடியவர் என்பதை இ. மு எ ச. தமிழ்மக்களுக்கு எடுத்துக்காட்டியது. இக்கண்ணோட்டத்தை தெளிவுபடுத்தி திரு. கைலாசபதி பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியதுடன் விவாத அரங்குகளையும் நடத்தியுள்ளார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஒரு தேசியக்கவி, அவரது அநேக கவிதைகளில் தேசிய உணர்வும், தேசிய ஒருமைப்பாடும் பரவிக்கிடக்கின்றது. என்பதை இ. மு. எ ச. முதன் முதலில் தமிழ்மக்களுக்கு எடுத்துக்காட்டியதுடன் சோமசுந்தரப் புலவருக்கு யாழ்ப்பாணத்தில் பெருவிழாநடத்தியது இவ்விழாவிற்கு முன்னின்றுழைத்ததார் திரு. கைலாசபதி.

1975 ம் ஆண்டில் இ. மு. எ. ச. ‘‘தேசிய ஒருமைப்பாட்டு மகாநாடு’’ ஒன்றை 75 ம் ஆண்டு 30, 31 ம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாகாநாட்டு மண்டபத்தில் நடத்தியது ‘‘தேசிய ஒருமைப்பாட்டு’’க்கான 12 அம்சக்கோரிக்கைகளை வகுப்பதற்கு உந்துகோலாக செயற்பட்டுழைத்தவர் திரு கைலாசபதி. இந்தப் பன்னிரண்டு அம்சக் கோரிக்கைகளை நாட்டிலுள்ள சகல தமிழ், சிங்கள எழுத்தாளர்கள் மத்தியிலும் மக்களின் மத்தியிலும் கொண்டு சென்று பல கூட்டங்களையும் விவாத அரங்குகளையும் நடத்தியது. நண்பர் கைலாஸ் நாட்டின் பல பகுதிகளுக்கும் இ. மு எ. ச. நடத்திய கூட்டங்களில் உற்சாகத்துடன் பங்குபற்றி உழைத்தார் இந்த நாட்டிலுள்ள இரண்டேயிரண்டு பிற்போக்கு அரசியல் கட்சிகளைத் தவிர ஏனைய அரசியல் கட்சிகளும் அன்று அதிகாரத்திலிருந்த அரசாங்கமும் ‘‘தேசிய ஒருமைப்பாட்டிற’’கான இந்தப் பன்னிரண்டு அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளச்செய்வதில் இ. மு. எ.ச. வெற்றி கண்டது.

கலை இலக்கியத்துறையில் இ மு எ ச வையும் கைலாசரையும் பிரிக்கமுடியாது இ. மு. எ. ச. வின் வரலாறும் கைலாசின் இலக்கிய வாலாறும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்திருக்கின்றன. கலை இலக்கியத் துறையில் அவர் ஸ்தாபனரீதியாக கூட்டுத்தலைமை அடிப்படையில் செயல்பட்டு வந்துள்ளார். ‘‘நான்’’ ‘‘எனது’’ என்று அவர் என்றும் கூறியதில்லை சிந்திக்கும் பொழுதும், எழுதும்பொழுதும். செயல்படும்பொழுதும் ‘‘நாங்கள்’’ ‘‘எமது’’ என்ற நிலைப்பாட்டைத்தான் கைலாசர் தொடர்ந்தும் கடைப்பிடித்தார். கோட்பாட்டை கூட்டுசேர்ந்து வகுப்பதுடன் அதை நடைமுறைப் படுத்துவதிலும் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டார். மகாநாடுகளையும் விழாக்களையும் இ மு எ ச நடத்துகையில் சுவரொட்டிகள் ஒட்டுவதிலிருந்து கதிரைகள் அடுக்குவது, மேடைகள் அலங்கரிப்பது வரை ஏனைய எழுத்தாளர்களுடன் சேர்ந்து பங்கு பற்றுவது அவரது போற்றக்கரிய குணம்சமாகும். நண்பர் கைலாசின் சிந்

(5-ம் பக்கம் பார்க்க)

இ. மு. எழுத்தாளர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனையும், கருத்துக்களும். அவர் வகுத்த கோட்பாடுகளும், அவரது செயல்பாடும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் என்றென்றும் வழிகாட்டியாகவும் உந்து கோளாகவுமிருக்கும்.

நல்லூரில் தியாகராஜ ஆராதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம், சற்குரு தியாகராசா சுவாமிகளின் 139 வது ஆண்டு ஆராதனை இம்மாத இறுதியில் நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள் மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறது.

அத்துடன் நமது நாட்டு மக்களின் நலத்துக்காகப் பிரார்த்தனையும் இவ் வைபவத்தின்போது மேற்கொள்ளப்படும். என மேற்படி மன்றச்செயலாளர் திரு. கா. இரகுநாதன், இசைமணி க. பாக்கியராசா, மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தெரிவித்தனர்.

ஈழத்தின் தலை சிறந்த இசைவாணர்கள் பங்கு பற்றும் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (ஐ)

புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் நான்காம் ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது விழாவில் நிலைய உறுப்பினர்கள் ஒன்று கூடி புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோரைத் தெரிவு செய்தனர்.

போஷகர் க. கோபால கிருஷ்ணர், தலைவர் க. சண்முகநாதன், உப தலைவர் சி. துரைராஜா, செயலாளர் க. நடராசா, பொருளாளர் சு. சுதாகரன், உப பொருளாளர் வி. நந்தகுமார், மற்றும் 3 உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடைசிநேர வரிவிளம்பரம்

தேவை

எழுதுவினைஞர் தேவை. அழகான எழுத்து, கணக்கு வைக்கும் அனுபவம் மேலதிக தகைமை. உடன் நேரில் வரவும்: பே. சோமசுந்தரம், 411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C 753

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
விஜயகாந்த்-கவுண்டமணி
நானே ராஜா
நானே மந்திரி

லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
Sean Connery Real
James Bond 007 in
THE BRIDGE TWO FAR
[Action Film]

பருத்தித்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேசமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

பொது பந்தோபஸ்து சட்ட 5ம் பிரிவின்கீழ் ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று இந்தச் சட்டத்தை பிறப்பித்தார்.

புதிய சட்டத்தின்கீழ்; இக் கடற்பிரதேச பிராந்தியத்தினுள் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரின் எழுத்துமூல அனுமதி பெறாமல் எந்த ஒரு தேவைக்கும் எவரும் செல்லமுடியாது என்றும், அதிகாரியின் அனுமதியுடன் 15 குதிரைவலு சக்தி கொண்ட மோட்டார் படகு மட்டுமே மீன்பிடி நடவடிக்கைகளில் அனுமதிக்கப்படும் என்றும் மோட்டார் இயந்திரம் வெளியில் இணைக்கப்பட்டுள்ள படகுகளில் 3 பேரும்; மற்றைய இயந்திரப்படகுகளில் 4 பேர்களும் மட்டுமே செய்வதற்கு அனுமதிக்கப்படுவோர்கள் என்றும் ஆழ்கடல் மீன்பிடிக்க செல்வோர் கரையிலிருந்து அரை மைல் தூரத்தினுள்ளேயே தமது மீன்பிடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் பாதுகாப்புப் படையினர் அடையாளம் காண்பதற்கு ஒரு படகை நிறுத்தவோ அல்லது ஒருவரை தடுப்புக்காவலில் வைக்கவோ அதிகாரம் கொண்டிருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

இன்று

(யாழ்ப்பாணம்)

அண்ணா தி. மு. கழகத்தின் அனுசரணையுடன் 15 பொதுசன அமைப்புகள் சேர்ந்து வெகுஜன கூட்டுக்குழு ஒன்றை உருவாக்கிமீண்டும் போராட்ட நடவடிக்கை பற்றி ஆராய்வதற்காக இன்று வெள்ளிமாலை 4 மணிக்கு அண்ணா தி. மு. க. காரியாலயத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்

இக்கூட்டத்துக்கு வருமாறு சகல பொதுஜன அமைப்புகளையும் அண்ணா தி. மு. க. பொருளாளர் பொன். மதிமுகராசா அழைத்துள்ளார்.

பிரிட்டிஷ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியொன்றுக்கு அமைச்சர் அத்துலத்முதலி அளித்த பேட்டியின் போது மேலும் கூறியதாவது:

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் திருமதி வில்லிஸை ஒப்படைக்கின்ற யோசனைக்கு இறைமையுள்ள எந்தவொரு அரசாங்கமும் உடன்பட முடியாது. ஏனெனில் அவ்வாறான உடன்பாடு தீவிரவாதிகளுக்கு அடிபணிந்ததற்குஒத்ததாகும். உலகிலுள்ள எந்தவொரு அரசாங்கமும் இத்தகையஏற்பாட்டினைஏற்காது எதுவித முன்நிபந்தனைகளுமின்றி திருமதி வில்லிஸ் விடுதலை செய்யப்படவேண்டுமென்பதே அரசாங்கத்தின் விருப்பமாகும்''.

ஒரு வாடகைக் காரில் முல்லைத்தீவுக்குச் சென்ற திருமதி வில்லிஸ் கடத்தப்பட்டமையும், இக்கடத்தலுக்கு 'ஈரோஸ்' உரிமை கோரியமையும் தெரிந்ததே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

உருக்கிலான மடிப்பு மேசைகள் வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உருக்கிலான மடிப்பு மேசைகளை (Steel Folding Desks) வழங்குவதற்கு விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப் பக்கட்டணமாக ரூபா 100/- செலுத்தி உரிய கேள்விப்பத்திரங்களையும், படவரைவுகளையும், நிதியாளரிடமிருந்து 20-02-86 வரை பெற்றுக் கொள்ளமுடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 25-02-86 முற்பகல் 10-00 மணி ஆகும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் UJ/F/SK/03/25/02/86 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நிதியாளர்
C 244

உருக்கமான வேண்டுகோள்

எமது ஸ்ருடியோ பாவிப்பில் இருந்த 9 ஸ்ரீ 3781 இலக்கமுடைய மிட்சூபிசி கலன் பிறவுண் நிறக் காரை கடந்த 3-ம் திகதி இரவு எமது இல்லத்திலிருந்து சில இளைஞர்கள் 3 நாட்களில் திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துக் கொண்டு சென்றார்கள், ஆனால் இன்றுவரை திருப்பித் தரவில்லை. எனவே புனிதமான இயக்கங்களாகிய நீங்கள் எமது காரைத் தயவுசெய்து மீட்டுத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

பாரத் ஸ்ருடியோ,
யாழ்ப்பாணம்.
13-2-86

C 760

உருக்கமான வேண்டுகோள்

எனக்குச் சொந்தமான 84 ஸ்ரீ 6982 என்னும் இலக்கமுடைய சிவப்பு 70) Seventy நிற மோட்டார் சைக்கிளை 11-02-86 செவ்வாய்க்கிழமை இரவு 8-15 மணியளவில் கன்னியர் மடத்துக்கு (கொன்வென்ற்) அருகாமையிலுள்ள பிரதான வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது. இது வரை எனக்கு மோட்டார் சைக்கிளை திருப்பித்தரவில்லை. இந்த மோட்டார் சைக்கிள் மூலம் தான் நான் தொழில் செய்கிறேன், இதனால் எனது குடும்பம் பாதிப்படைகிறது. ஆனபடியால் தயவு செய்து இம் மோட்டார் சைக்கிளை திருப்பி ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
இ. திருச்செல்வம்

C 759

குச்சவெளிப் பகுதியில் 6 மணி நேர சமர்!

[திருகோணமலை]

திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் உள்ள புடவைக்கட்டு என்னுமிடத்தில்இராணுவத்தினருக்கும்போராளிகளுக்குமிடையே சுமார் ஆறுமணித்தியாலங்களாக நேரடிச்சமர் நடந்தது.

நேற்றுக்காலை 10 மணியளவில் குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து சுமார் 80க்கு மேற்பட்ட இராணுவத்தினர் நடந்துசென்று ரோந்துசேவையிலீடுபட்டிருந்தனர்.

முகாமிலிருந்து சுமார் மூன்று மைல் தூரமுள்ள புடவைக்கட்டு என்னுமிடத்தை இராணுவத்தினர் அடைந்ததும் போராளிகள் தாக்கத் தொடங்கினர்.

இருபகுதியினருக்குமிடையே துப்பாக்கிச் சூட்டுச் சமர் இடம்பெற்றது பிற்பகல் 4 மணிவரை இச்சமர் நீடித்தது.

இடையிடையே குண்டுகள் வெடிச்சத்தங்களும் துப்பாக்கிச்சூட்டுசத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன இருதரப்பிலும் ஏற்பட்டுள்ள சேதவிபரம் எதுவுந் தெரிவிக்கப்படவில்லை. (மா)

விமான நிலைய---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினர் அதிகமாக காணப்பட்டனர். குரும்பசிட்டி கல்நெருக்கும் தொழிற்சாலை வரை இராணுவத்தினர் வந்து தரித்து நின்றனர் மற்றும் பகுதிகளிலும் மரங்களில் ஏறி நின்றும் இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்

அச்சமயம் ஹெலிகொப்டர் ஒன்றும் வானததில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. திடீரென அதிலிருந்து சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது கூடவே எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குண்டுகளும் வெடிக்கப்பட்டன.

11 மணியிலிருந்து 12-30 மணிவரை அப்பகுதியில் தொடர்ச்சியாக சத்தங்கள் கேட்டன. பின்னர் ஹெலிகெப்டர் தரை இறங்கியது. இராணுவத்தினர் தமது பயணத்தை தொடராமல் திரும்பிச் சென்றனர்.

இந்த வெடிச்சத்தங்கள் விமான நிலைய சுற்றுடலிலும் அதையடுத்து கட்டுவன், ஏழாலை, குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், வசாவிளான்கிராமங்களிலும் பெரிதும் பதட்டத்தை ஏற்படுத்தியது. மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர். கடைகள் பூட்டப்பட்டன. போக்குவரத்தும் சிலமணி நேரம் தடைப்பட்டது.

விமான நிலைய சுற்றுடல் பகுதியில் வசித்த மக்கள் ஏற்கனவே பெருமளவில் வெளியேறியுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து மேலும் அங்கிருந்து மக்கள் வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை விமானம் ஒன்று பலாலிக்கு வந்து தரையிறங்கியதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு பாதுகாப்பளிக்கும் நோக்குடன் விமான நிலைய சுற்றுடலில் இராணுவத்தினர்ரோந்துதடவடிக்கையில் ஈடுபட முன்வந்ததிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பேரில் ஒருவரான வல்லிபுரம் யோகராசா சம்பவத்தின் பின்னர் கடலில் நீந்தி வேறுபடகு மூலம் குருநகர் வந்தடைந்தார். இவர் தெரிவித்த தகவலின்படி மற்ற ஆறுபேரும் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்பட்டு குருநகரே சோக மயமாகக் காட்சி தந்தது

மீனவர்களில் நால்வர் கடற்படையினால் மீட்கப்பட்டு இராணுவ முகாமில்ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவர்களில் ஒருவர் சம்பவத்தின்போதுஏற்பட்டகாயத்தினால்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விசாரணை மேற்கொண்டுள்ள இராணுவத்தினர் குருநகருக்குத் தப்பி வந்த இருவரை இராணுவ முகாமுக்கு ஆஜராகுமாறு பணித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

31ம் நாள் நினைவஞ்சலி

திரு. ஆ. வ. சதாசிவம்
(சட்டத்தரணி J P U.M.

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 15-02-86 (சனிக்கிழமை) தமிழகம்' காங்கேசன்துறையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(C 752)

படகு எரிந்து---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாடு'க்கு விபரிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

'திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வேளையில், நாம் படகின் அடித்தளத்தினுள் பாதுகாப்புக்காகப்புகுந்துகொண்டோம் நாம் அவ்வாறு புகுந்து கொண்ட அடுத்த பத்து நிமிடங்களுக்கு எதுவித சத்தமும் இல்லை. எல்லாம் முடிந்துவிட்டது என்ற நிம்மதியில் மீண்டும் படகின் மேல் தளத்துக்குவந்த போது மீண்டும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. 'இனி தப்ப வழியில்லை' என்று எண்ணிய நாம் படகிலிருந்து கடலில் குதித்தோம். அப்போது நள்ளிரவு இருக்கும்.

''கடலில் குதித்து நீந்த ஆரம்பித்த நான் திரும்பிப் பார்த்தபோது எமது படகு ஒரு தீப்பிழம்பாக கவாலை விட்டு எரிந்து கொண்டிருந்ததையும் அது படிப்படியாகத் தண்ணீரில் மூழ்குவதையும் கண்டேன்.

''சிரமப்பட்டு கரையை நோக்கி நீந்தியநான் அதிகாலை ஐந்தரை மணியளவில் இரணைதீவுக் கரையை அடைந்தேன். அங்கிருந்த மீனவர்கள் என்னை ஆசுவாசப்படுத்தி உணவுதந்து உதவினர் காலை ஒன்பதரை மணியளவில் குருநகர் வந்து சேர்ந்தேன்

என்னுடன் படகிலிருந்த மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எனக்குத் தெரியாது ''

'2.500 தமிழர் வாழ்ந்த பன்குளத்தில் 36பேர் (பணயக் கைதிகளாக) 'மட்டுமே உள்ளனர்

யாழ் நகர் வந்த சங்கரன் தகவல்

(கா. யோகநாதன்)

''திருமலை அகதிகள் முகாம்களிலிருந்து ஆயுதப்படையினரால் கூட்டிச்செல்லப்பட்ட 32 பேரில் எவரும் திரும்பிவரவில்லை. இவர்களில் வயோதிபர் சிலரும் உள்ளனர். எங்கள் முகாமிலிருந்து கந்தசாமி என்பவர் ஆயுதப்படையினரால் கூட்டிச்செல்லப்பட்டார். ஆனால் பின் அவர் உப்புவெளியில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது''

திருமலையிலிருந்து சில தினங்களுக்கு முன் வந்த விவசாயியான இ. சங்கரன் (51 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார். இவருடன் இவரின் மனைவி சிவரத்தினம் உட்பட குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் வந்திருந்தனர்.

இக்குடும்பத்துடன் மற்றும் 15 குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்து சங்கிலியன் புனர்வாழ்வு கழக அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

காடுவழியாக வந்தனர்

சங்கரன் மேலும் தெரிவித்ததாவது, ''6 மாதத்திற்கு முன்னர் பன்குளத்தில் நடந்த தாக்குதலைத் தொடர்ந்து அங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் பலநாள் பட்டினி கிடந்து காடுகள் ஊடாக திருமலைக்கு வந்து சேர்ந்தனர்.

''பன்குளத்தில், பல்வேறு இடங்களிலும் சுமார் 2500 தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் அநேகர் விவசாயத்தில் ஈடுபட்டுவந்தனர். இவர்கள் எல்லோரும், தம் சொந்த நிலத்தை விட்டு வெளியேறி வந்துள்ளனர். ஊர்காவல்படையினர், ஆயுதப்படையினரின் கொடுமைகளை பொறுக்கமுடியாமல், பன்குளத்தை விட்டுவெளியேறினார்கள். தற்போதுபன்குளத்தில் 36 தமிழரைமட்டும், பணயக் கைதிகளாக, ஆயுதப்படையினர் வைத்திருப்பதாகதெரிய வந்துள்ளது.

யாழ்நகர் திரும்புகிறார்கள்

''திருமலையில்'மெதடிஸ்'முகாமில் தமிழர் 600 அகதிகளும், சென்.ஜோசப் முகாமில் சுமார் 1200 அகதிகளும், மற்றுமொரு முகாமில் 750 அகதிகளும் தங்கியுள்ளனர். இவர்கள் எல்லோரும், யாழ்ப்பாணம் வருவதற்கு தயாராக இருக்கின்றார்கள்.

''ஆயுதப்படையினர் அகதி முகாமிலிருந்து முதலில் 150 பேரை கூட்டிச்சென்றனர். விசாரணையின் பின் அவர்களை விடுதலை செய்தனர். பின் 32 பேரை கூட்டிச்சென்றனர். அவர்கள்திரும்பி வரவில்லை. இதனால் அகதிகள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டது. முன்னர்போல் கடல்மார்க்கமாக முல்லைத்தீவு வந்து யாழ்ப்பாணம் வருவது ஆபத்தானது. வழியில் பல இடங்களில் சோதனை நடக்கிறது. இதனால் நாங்கள் கொழும்பு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்''

யாழ். பிரதேச மின்சார சபையினரின்

ஓர் அன்பான வேண்டுகோள்

28-01-86ம் திகதி சுமார் ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள அலுமினியம் மின்கடத்திகள் (Aluminium Conductor) சுன்னாகம் இ. மி. ச. களஞ்சியத்தில் களவாடப்பட்டுள்ளன. இவை, பலதரப்பட்ட முயற்சிகள் மத்தியில் 2 4 கோடி ரூபா செலவில் 86ம் ஆண்டுக்குரிய யாழ் பிரதேச மின் அபிவிருத்தி வேலைகளுக்காக எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணம் வந்த பொருட்களின் ஒரு பகுதியே. இதனால் இவ்வேலைகள் பாதிப்படைவதோடு இனிமேலும் கொழும்பிலிருந்து பொருட்கள் கொண்டுவருவதிலும் பெரும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 11-02-86 இரவு திருத்த வேலைகளுக்காக பிறவுண் றோட் இ மி ச யாழ். டிப்போவில் வைக்கப்பட்டிருந்த மின்மாற்றி (Transformer) களவாடப்பட்டுள்ளமை, எமக்கு மீண்டும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. யாழ் பிரதேசத்தில் மின்களவினால் ஏற்படக்கூடிய பழுவினால் (Over Loading) ஏற்கனவே பல மின் மாற்றிகள் பழுதடைந்துள்ளன. ஆயினும் மக்களின் கஷ்டத்தை உணர்ந்து அபிவிருத்தி வேலைகளுக்காக வரும் புதிய மின்மாற்றிகளை இவ்விடங்களில் பூட்டி, பழுதடைந்தவைகளை நாம் இங்கேயே திருத்துவது அல்லது கொழும்பிற்கு அனுப்பி திருப்பி நாமே எடுப்பது வழக்கம். ஆகவே இந்தக்களவினால் மின்மாற்றிகளை கொழும்பில் திருத்தி எடுப்பதோ, அல்லது புது மின் மாற்றிகள் கொழும்பிலிருந்து கொண்டுவருவதோ, எல்லாமே தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது ஏற்கனவே போதிய மின்மாற்றிகள் இன்றி சஷ்டப்படும் யாழ். பிரதேசம், மேலும் இக்கட்டான அவல நிலைக்கு தள்ளப்படக்கூடும். இதனால் சாதாரண மின்பாவனையாளர்கள் மட்டுமல்ல எவ்வளவோ தொழிற்சாலைகள், ஆலைகள், தொழில் ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகள் யாவுமே பாதிப்படையும் நிலைக்குத் தள்ளப்படும் பெரும் அபாயம் தோன்றியுள்ளது.

ஆகவே யாழ் மக்கள் பல்வேறு சேவைகளும் தடைப்பட்டு அல்லலுறும் இவ்வேளையில், எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் மின்பாவனையை ஓரளவு சகஜ நிலையில் தப்ப வைத்திருக்கும் எமது முயற்சிகள் யாவும் பாதிப்படையாது, பொதுமக்களையும் இருளில் மூழ்கடித்து மேலும் அவலநிலைக்கு தள்ளாது சம்பந்தப்பட்டவர்கள் முக்கியமாக மின்மாற்றியையும் மற்றைய கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும் திருப்பித்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் தற்போதைய நிலையின் தாக்கத்தை பூரணமாக உணர்ந்து, கஷ்டமான இந்நேரத்தில், அத்தியாவசிய சேவையான மின்பாவனை வேலைகளுக்குரிய பொருட்களில் சம்பந்தப்பட்டவர்கள் யாவருமே, இனிமேலாவது கைவையாது இருக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

மின்பொறியியலாளர்,
(யாழ். பிரதேசம்)
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.

(A 238)

இன்றைய பலன்

மாதம்-மாசி
திகதி-2 [1986-2-14]
கிழமை-வெள்ளி
திதி-பஞ்சமி காலை 9-10ன் மேல் ஷஷ்டி
நட்சத்திரம்-அச்சுவினி முழுநாளும்

மேடம்: அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தையடக்கின் நிலைமை சீர்பெறும். உடல் நலத்தைப் பேணவும்

இடபம்: குடும்பத்தில் சுமுகமான நிலைதென்படும். அந்தஸ்திலும் உயர்வுண்டு இல்லத்திலும் திருப்திகரமான நிலைதென்படும்.

மிதுனம்: அறவழியில் நாட்டம் பிறக்கும். சுபகாரியமொன்றுக்கு வழிகோலப்படலாம். சகோதரசுகமும் உண்டு.

கடகம்: அறிஞர்கள் சந்திப்புக்கிடமுண்டு. உடல் நிலையில் உற்சாகம் தென்படும். தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் பிறக்கும்.

சிம்மம்: இல்லத்தில் இனிமையான சம்பவம் இடம்பெறும். இனசன மகிழ்ச்சியும் தொழில் சிறப்புமுண்டு.

கன்னி: மறைமுகத் தாக்குதல் ஒன்று இடம்பெறலாம், தொழில் புரியுமிடத்தில் கருத்துமோதல்களும் ஏற்படலாம். கவனம் நன்று.

துலாம்: குடும்பத்தில் குறைகேட்க நேரும், தொழிலிலும் சிரமங்கள் அதிகரிக்கும். சிறுபூசல்களுக்கும் இடமேற்படும்.

விருச்சிகம்; மேலதிகாரிகளைப் பகைக்க நேரிடும். கடமையாற்றுவோர் விழிப்புடன் செயலாற்றுவது நன்று. செலவும் உண்டு.

தனுசு: இறைவழிபாட்டால் இடர் நீங்கும். புண்ணியவிருப்பும் மேலிடும். மூத்தோர் உதவியும் உண்டு.

மகரம்: செய்தொழிலால் சிறப்புண்டு. புதிய கண்டுபிடிப்புக்களும் இடம்பெறும். வெளியிடசதுத் தொடர்புகளிலும் திருப்தியுண்டு.

கும்பம்; பிறரின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும். பிதாவழிச் சுகமுமுண்டு.

மீனம: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

[illegible]

இப்படியும் நடக்கிறது

உயிருக்கு உத்தரவாதமில்லை.

அடிக்குறிப்பு: எந்தநேரமும் எதுவும் நடக்கும்.

உடலுக்கு [சடலம் என்று கொள்ளவும்] உத்தரவாதமில்லை.

அடிக்குறிப்பு: சடலங்கள் அதிகமாக உறவினர் கைக்குக் கிடைப்பதில்லை.

இப்பொழுது சாம்பலுக்கும் உத்தரவாதமில்லை.

அடிக்குறிப்பு: வவனியா சென்ற உறவினர்களின் அனுபவம் இது.

-ஊடுருவி

27-ம் திகதி பகிஷ்கரிப்பு: ஆதரவு திரட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கும் பகிஷ்கரிப்பு தொடர்பாக கிளிநொச்சி, வவனியா மாவட்டங்களில் ஆதரவுதிரட்டப்படவுள்ளது.

இம்மாதம் 17ம் திகதிமுதல் இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள அரசாங்க காரியாலயங்கள், பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்களில் ஆதரவு திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தொழிற்சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேபோன்று மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் அடுத்தவாரம் ஆதரவு திரட்டப்படவிருப்பதாகவும் அவர் கூறினார். (க)

பிரார்த்தனை இயக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கும் முழுஅளவிலான பகிஷ்கரிப்பில் பிரார்த்தனை இயக்கத்தை எந்த வகையில்நடத்துவதென்று இன்று தீர்மானிக்கப்படவிருக்கிறது.

தமிழ்ப்பேசும் மக்கள்சபை, இதுபற்றி ஆலோசித்து முடிவு செய்ய இன்று கூடவிருக்கிறது.

கிராமங்கள்தோறும் அன்றையதினம் ஆலயங்களில் இந்தப் பிரார்த்தனை இயக்கத்தை நடத்துவதுபற்றி இன்று ஆலோசிக்கப்படும் என்று மக்கள்சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (க)

ஸ்ரான்லி கல்லூரியின் தனித்துவத்துக்கு புகழாரம்

[யாழ்ப்பாணம்]

''அரசாங்கம் இன்றிருக்கிற சூழ்நிலையில், யாழ்ப்பாணப் பகுதிகளுக்குரிய அபிவிருத்திக்கு ஒதுக்கும் பணம் மிகக் குறைவென்றே சொல்லவேண்டும். எனவே, பழைய மாணவர்களே தம் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவி, ஒத்துழைப்புத்தரவேண்டும்''

இவ்வாறு, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், ஒன்றுகூடலும் நடைபெற்றபோது மேற்படி வைபவங்களுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கலாநிதி சு. மோகனதாஸ் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

''பாடசாலைக்கு நல்ல பெயர், அங்கு கல்வி கற்ற பழைய மாணவர்கள் சிறந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதன் மூலமே உருவாகும். ஒரு மாணவனின் தாய், தந்தை யார் எனக் கேட்பதைவிட எந்தப் பாடசாலையில் படித்தவர் என்று கேட்பதையே சமூகம் வழக்கமாக்கியுள்ளது. நாம் எமது பாடசாலைக்குரிய வளர்ச்சியில் பங்கு கொள்வதுடன், எமது பாடசாலையின் நற்பெயருக்கும் களங்கமில்லாமல் வாழவேண்டும்''.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தமதுரையில்; ''மக்கள் சமுதாயத்தில் முதலாம் இடத்தை ஆலயங்கள் வகிக்கின்றன. இரண்டாம் இடத்தை வித்தியாலயங்கள் பெறுகின்றன. இருபத்து நான்கு மணி நேரமும் உயிரோட்டமாக இயங்கும் நிலையங்கள் பாடசாலைகளாகும். 1925ம் ஆண்டு இலங்கையிலேயே முதன் முதலாக அரசாங்கப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலையிலேயே இலங்கை பூராவுமுள்ள புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் கல்விகற்க வருவார்கள். அன்று சுயபாஷைக் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் ஒன்றாக இருந்த ஒரே பாடசாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமே. இத்தனை சிறப்புக்களையும் இப்பாடசாலைக்குத் தந்த பெருமை அரியாலை அமரர் கனகரத்தினம் அவர்களையே சாரும். தமிழ்ப் பெரியார்கள் எல்லோரையும்விட அமரர் கனகரத்தினம் மிகக் குறுகிய காலத்தில் இலங்கை சட்ட நிருபணசபை உறுப்பினராக இருந்து அளப்பரிய பல தொண்டுகளைச் செய்

[7ம் பக்கம் பார்க்க]

பாடசாலை கிரிக்கெட் போட்டி: நாளை முதல் ஆரம்பம்

இம்முறை '50 ஓவர்' போட்டிகள்

(விளையாட்டு நிருபர் 'தேவா')

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே வருடாந்தம் நடைபெறும் கிரிக்கெட் போட்டி நாளைமுதல் ஆரம்பமாகின்றன.

இவ்வருடம் இக்கிரிக்கெட் போட்டியில், பல கல்லூரிகள் கலந்து கொள்ளக் கூடிய விதத்தில் தமது கோஷ்டிகளைத் தயார் செய்துள்ளபோதிலும், கிரிக்கெட் ஆட்டத்தில் தனக்கென ஒரு இடத்தை பிடித்கொண்ட யாழ். மத்திய கல்லூரி இம்முறை இப்போட்டிகள் எதிலும் கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்திய கல்லூரி, பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதினால், இக்கல்லூரியின் மைதானத்தில் எந்தவித விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்துவதற்கு மேற்படி கல்லூரி முன்வரவில்லை.

இம்முறை கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் கல்லூரிகளின் பெயர் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனைக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

காப்டன் வாகீசன்

மேற்படிக் கல்லூரிகளின் கிரிக்கெட் கோஷ்டிகளிடையே சென். ஜோன்ஸ் கல்லூரிக் கோஷ்டியே மிகவும் பலம் கொண்ட கோஷ்டியாகத் திகழ்வதாக, கிரிக்கெட் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். இக்கோஷ்டி கடந்த வாரங்களில் பல பரீட்சாத்தமான போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கு இப்முறை, கிரிக்கெட் ஆட்டத்தில் 4 வருட அனுபவம் கொண்ட வீரர் ஏ. வாகீசன் தலைமை தாங்குகின்றார். சிறந்த துடுப்படி வீரரான இவர் கடந்த வருடங்களில் கிரிக்கெட் போட்டியில்பல 'செஞ்சரிகளை அடித்தவர், சிறந்த விருதுகளைப் பெற்றவர்.

'50 ஓவர்' போட்டிகள்

கடந்த வருடங்களில் பாடசாலைக் கிரிக்கெட் போட்டிகள் இரண்டு நாட்களுக்கு நடைபெறுவது வழக்கம் ஆனால் இம்முறை சகலபோட்டிகளும், மட்டுப்படுத்தப்பட்ட '50 ஓவர்' போட்டியாகவே நடைபெறும்.

நாளையப் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரியுப் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில்மோதுகின்றன.

ஸ்ரான்லி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர். ஏககாலத்தில் சபையின் ஐந்து அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து செயல்பட்டவர். அவரினால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை இன்று அவரின் பெயரைத் தாங்கி நிற்பது மிகப்பொருத்தமே இன்று இப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் முயற்சியால் பாடசாலை மிகவும் முன்னேற்றமடைகிறது. இலங்கையிலுள்ள பதினான்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாகவுள்ள இப்பாடசாலை; வணிகத் துறையில் முழு நாட்டிலேயும் தனித்துவமிக்கதாக விளங்குகிறது'' என்றார்.

இப்பாடசாலையில் பல வருடங்கள் ஆசிரியர்களாகக் கடமை புரிந்த பதினைந்துக்கு மேற்பட்ட முதுபெரும் ஆசிரியர்கள் இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ஐ)

சேவைநீடிப்பு ஆசிரியர்கள் சகலருக்கும் சமசம்பளம்

(கொழும்பு)

ஆசிரிய சேவையில் 60 வயதுக்குப்பின் ஒப்பந்த அடிப்படையில் சேவை நீடிப்புப் பெற்று கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் தமிழ், சிங்கள ஆசிரியர்களுக்கும் இடையே இருந்து வந்த சம்பள முரண்பாடு நீக்கப்பட்டுள்ளது,

ஆங்கிலப் பயிற்சிபெற்ற ஆசரியர்களுக்கு அறுபது வயது பூர்த்தியாகும் போது எடுத்த கடைசி மாதச் சம்பளமும் தமிழ், சிங்களம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுச்கு பயிற்சி முடிந்து வெளியேறும் போது கொடுக்கப்பட்ட ஆரம்ப சம்பளமும் இதுவரை வழங்கப்பட்டு வந்தது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கல்வி அமைச்சின் மேலதிக காரியதரிசியுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து உடனடியாக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் சகல ஆசிரியர்களுக்கும் 60 வயது பூர்த்தியாகும் போது அவர்கள் எடுத்த சம்பளத்தைவழங்கும்படி சகல கல்விப்பணிப்பாளருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கு சமாதானக் குழுவுக்கு நிரந்தரக் கட்டிடம்

[யாழ்ப்பாணம்]

காந்திநகர், கல்திட்டி, மந்திபுலம் ஆகிய பகுதிகளடங்கிய கொக்குவில் மேற்குக் கிராமத்தின் 'மக்கள் முற்போக்குச் சமாதானக் குழு' வுக்கான நிரந்தரக் கட்டிடம் அண்மையில் ஆறுகால் மடம் பிரஜைகள் குழுப் பொருளாளர் திரு எஸ் கே தம்பிராசாவினால் திறந்துவைக்சப்பட்டது

இத்திறப்பு விழா வைபவத்துக்கு திரு. எஸ் இராசகுமாரன் தலைமைதாங்கிப் பேசும் போது, இக் குழு ஆரம்பிக்கப்பட்டு ஆறுமாத காலத்துள் இப்படியான நிரந்தரச் கட்டிடத்தை அமைத்துள்ளமை பெரிய சாதனையென்றும், இக் கட்டிடத்தை அமைக்கக் காணி வழங்கியுள்ள திரு. வி. நவரத்தினத்தைப் பெரிதும் பாராட்டுவதாகவும் கூறினார்.

இவ்விழாவில் காந்திஜி சனசமூக நிலையச் செயலாளர்திரு. ஆர். நடராசா, ஆனைக் கோட்டை விழிப்புக் குழுச் செயலாளர் திரு. எம். மகாலிங்கம், முன்னாள் கொக்குவில் கிராமசபை உப தலைவர் திரு. வி பரமலிங்கம், புதுகுடியிருப்புப் பாடசாலை அதிபர் திரு. எஸ். துரைராசா, கொக்குவில் சமாதான சபைச் செயலாளர் திரு. என். சதாசிவம், அண்ணா தி.மு.க இலங்கை அமைப்பாளர் பொன். மதிமுகராசா, கேணியடி ஸ்ரீ கலைமகள் வாசிகசாலைச் செயலாளர் திரு. ரி. இரத்தினேஸ்வரன், ஆனைக் கோட்டை பாரதி சனசமூக நிலைய திரு. என். சோபாலகிருஷ்ணன், நாவாந்துறை விழிப்புக் குழுத் தலைவர் திரு திரு பி.பி இந்திரன், கொக்குவில் மேற்கு மக்கள் முற்போக்குச் சபைத் தலைவர் திரு எஸ். ஸ்ரீவிஜயன், உயரப்புலம் மகா வித்தியாலய அதிபர் திரு. திரு நாவுக்கரசு, கொக்குவில்மேற்கு போதகர் திரு. ஏ. அருமைத்துரை, நவாலி ஸ்ரீ களனி அம்பாள் கிராம மக்கள் பாதுகாப்புச் சபை செயலாளர் திரு ச செய்வேந்திரம், காந்திஜி சனசமூக நிலைய போஷகர் திரு எஸ். பஞ்சலிங்கம், தாவடி ஸ்ரீ காளி அம்பாள் கிராம மக்கள் பாதுகாப்புச் சபை திரு. ஏ. அப்புத்துரை யாழ். மாவட்டச் சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு. இ. மயில்வாகனம், இராமநாதன் கல்லூரிமாணவி செல்வி கீதாஞ்சலி நவரத்தினம் உட்படப் பல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பேசினர்கள். (ஐ)

முற்போக்கு சமாதானக்குழு

(யாழ்ப்பாணம்)

காந்திநகர், கல்திட்டி, மந்திபுலம் ஆகிய பகுதிகளடங்கிய கொக்குவில் மேற்கு மக்கள் முற்போக்கு சமாதான குழு நிர்வாக உறுப்பினர் தெரிவு அண்மையில் நடைபெற்றது புதிய நிர்வாகிகள் பின்வருமாறு தலைவர் திரு. எஸ் ஸ்ரீ விசயம், உப தலைவர் திரு ஐ. அப்புக்குட்டி, செயலாளர் திரு என். சனகரத்தினம் உப செயலாளர் திரு. என். சதாசிவம், நிர்வாக உறுப்பினர்கள் திருவாளர்க எஸ் பரிமளநாதன், ஏ தில்லையம்பலம் ஏ. பாலசுப்பிரமணி, கே. தர்மலிங்கம், ஆர். சந்திரபாலன், கே. இராசன், என். சற்குணராசா.

நிர்வாக ஆலோசகர்கள் திருவாளர்கள் வி. நவரத்தினம். ஆர். பாலலிங்கம், எஸ் இராசரத்தினம், எஸ். முத்துக்குமாரு, எஸ். சுப்பிரமணியம், எஸ். நாகராசா, எஸ். இராசகுமாரன். (ஐ)

இன்று கைதடியில்

[யாழ்ப்பாணம்]

கிராமிய கலைக் குழுவினரின் தயாரிப்பில் உருவான ''சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்னும் நாடகம் இன்று கைதடியில் முறையே முத்துக்குமாரசாமி வித்தியாலயம், விகனேஸ்வரா வித்தியாலயம், குருசாமி வித்தியாலயம் ஆகிய மூன்று அரங்குகளில் மேடையேற்றப்படவுள்ளது.

65-வது முறையாக மேடையேற்றப்படும் இந்த நாடகம், பரந்தளவிலான வரவேற்பினைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

தவக்காலச் சிந்தனை!

3ம் நாள்

அற்ப மனிதா! கடவுளுக்கு எதிர் வினா விடுக்க நீயார்? பாத்திரம் தன்னை உருவாக்கியவனிடம். ஏன் என்னை இவ்வாறு செய்தாய்? என்று சொல்லுமோ? ஒரே களிமண் மொத்தையிலிருந்து மதிப்புயர்ந்த கலனையோ மதிப்பற்ற கலனையோ வனையக் குயவனுக்கு அம்மண் மீது உரிமை இல்லையோ? கடவுளின் செயலும் இத்தகையதே. [உரோ 9: 20, 21]

என்று புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுகிறார். இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் தனது மட்டுப்படுத்தப்பட்ட தன்மையினை, வரையறைகளை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். அவன் தனக்கு கொடுக்கப்பட்ட சக்திகளை வீண் பிரயோகம் செய்யாது, அழிவினை விளைவிக்காது, ஆக்கபூர்வமான முறையில் வாழுதல் வேண்டும். பிறரது நல்வாழ்க்கையை கெடுக்காது அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கு தேவையான ஊக்குவிப்புக்களை கொடுத்து வாழமுற்படவேண்டும்.

''நான் மகிழ்வறுகின்றேன் எனது ஆற்றல்களை நினைத்து அகமகிழ்கின்றேன் என்னோடு பேசுவதை என்னோடு பழகுவதை என்னோடு சேர்ந்து வாழ்வதை பலர் விரும்புகிறார்கள். எனது வாழ்க்கை விழுமியங்கள், எனது சிந்தனைகள் எனது செயற்பாடுகள் ஒரு மகிழ்சிகரமான சூழலை உருவாக்கி வருகின்றன'' என்று கூறிக் கொள்ளத்தக்க வகையில் வாழுகின்ற மனிதர்களே பேறு பெற்றவர்கள்.

வின்சென்ற் பற்றிக்

அ. ம. தி

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

சவரிமுத்து

அந்தோனிப்பிள்ளை

(மிருசுவில்)

தோற்றம்: 15-06-1922

மறைவு: 14-02-1985

ஐயா!

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் இனியமுகம் என்றுமே எம் உள்ளத்தில் நிலைத்துவிட்டதே. எப்போதும் சிரித்துக் கொண்டுமற்றவர்களையும் சிரிக்க வைப்பீர்களே. இன்று நாம் கண்ணீர் விடும்போது ஆறுதல் இல்லையே. நீங்களே எமக்கும் ஆறுதல் தருவீர்கள் என்று இரக்கின்றோம். வறுமையிலும் செம்மையாக எல்லோர்க்கும் இனியவனாக வாழ்ந்தீர்கள் உங்கள் ஆத்ம நித்திய இளைப்பாற்றியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால்

துயருறும்:

அன்புக்குடும்பத்தினர்

தவசிகுளம்

மிருசுவில். C 751

யாழ்ப்பாண மாவட்ட

கொம்பிளான் பாவனையாளருக்குச் செய்தி

கொம்பிளான் விநியோகம், விற்பனை ஆகியவற்றைத் தற்காலிகமாக நிறுத்துவதென்றும் தற்போதைய கையிருப்புகளைப் பாவனைக்கு விடாது திரும்பப் பெற்றுக் கொள்வதென்றும் உற்பத்தியாளர்கள் செய்து கொண்ட முடிவுகசமைய, யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொது மக்களும் வியாபாரிகளும் தம்வசமுள்ள கொம்பிளான் கையிருப்புகளை. சிற்றி மெடிகல்ஸ் 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், எஸ். வி. முருகேசு 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஆகிய கடைகளில் கையளித்தால் அவர்கள் அவற்றுக்குரிய பணத்தை திரும்பத் தருவார்கள்.

பாவனையாளர்களும், வியாபாரிகளும் தமது பணத்தைத் திரும்பப் பெறுதல் தொடர்பான சகல கோரிக்கைகளையும் 1986 பெப்ரவரி 28-ம் திகதியளவில் சமர்ப்பித்தல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் எவ்வித கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படா.

கிளாக்ஸோ சிலோன் லிமிட்டெட்

த. பெ. 1653,

கொழும்பு.

C 243

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

பூவரசங்குளத்தில் பயங்கரம் பலர் பலி!...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தும், வாகனங்களுக்கு முன் பாக ஜீப்பில் வந்த 'கறுப்புடை' தரித்தவர்கள் திடீரெனக் குதித்து, கடைக்குள் நின்றவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

குணசேகரா தகவல்

படுகாயமடைந்த குணசேகரா இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கையில்; ''கடைக்குள் சுமார் 20-25 பேர் தேநீர், சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தனர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் இதற்குள் அடங்குவர். வாகனங்களில் வந்தவர்கள் திடீரென அவ்விடத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தனர். ஜீப்பில் இருந்து இறங்கிய கறுப்பு உடை தரித்தவர்கள், கடைக்குள் நின்றவர்கள் மீது 100-150 தடவை சுட்டார்கள். எனக்கும் சூடு விழுந்தது. நிலத்தில் விழுந்து விட்டேன். கடைக்குள் நின்றவர்கள் எல்லோரும் இறந்திருக்கலாம் எனக் கருதுகின்றேன். படுகாயமடைந்த என்னையும் எனது மருமகனையும் மற்ற சிப்பந்தியையும் சுட்டவர்களே வேறு வாகனம் ஒன்றில் ஏற்றினர்கள். அப்பொழுது 'பயங்கரவாதிகள்' சுட்டதாகச் சொல்லும்படி எச்சரிக்கை செய்தார்கள்', போசனசாலை ஒரே இரத்தவெள்ளமாகக் காட்சியளிக்கிறது'' என்று குணசேகரா மேலும் தெரிவித்தார்.

வவனியா மாவட்டப் பிரஜைகள்குழு இக்கோரக் கொலைச் சம்பவம் குறித்து அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர், பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி ஆகியோருக்குப் புகார் செய்துள்ளனர். பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [மா]

“‘சி இணைப்பை ஏற்கிறோம்; சிறிமாவுக்கு என்ன தெரியும்?’

ஜனாதிபதி பேட்டி

(நேற்றைய தொடர்ச்சி)
(சென்னை)

'சர்வகட்சி மாநாட்டில் பேசப்பட்ட விஷயங்களில் 'சி' அனுபந்தமும் ஒன்று எங்களுடைய இறுதியான யோசனைகள் அந்த அனுபந்தத்தில் காணப்பட்டவைதான். இவையெல்லாம் பற்றி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு என்ன தெரியும்? அவர்தான் அங்கு இருக்கவில்லையே!''

இவ்வாறு 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் திரு 'சோ' வுக்கு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன அளித்த பேட்டியில் கேள்வி எழுப்பினர். இப்பேட்டியின் விபரம் வருமாறு:

சோ: 'சி' அனுபந்தம் என்று அழைக்கப்படும் யோசனைகளில் கூறப்பட்ட விஷயங்களை எடுத்துக்கொண்டால் என்ன?

ஜே. ஆர்: அதனை முழுமையாய் நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்.

சோ: ஆனால் முதலில் இராணுவத்தீர்வை அடையவேண்டுமென்றநிலை இருந்தால்...?

ஜே. ஆர்: நான் அப்படிச் சொல்லவில்லையே. இரு தீர்வுகளும் சேர்ந்தே நடக்கவேண்டுமென்று தானே சொன்னேன்.

சோ: நீங்கள் அப்படிச் சொல்லவில்லைத்தான். ஆனால் நடைமுறையில் பார்க்கும் போது, திம்புபேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துவிட்டன. அதற்கு முன்பாக இங்கு நடந்த சர்வகட்சி ஆலோசனைகள் நிறுத்தப்பட்டு விட்டன. நீங்கள் சொல்வதுபோல் இந்திய அரசு தூதுவருடனும் மற்றும் சிலருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம். ஆனால் அரசியல் தீர்வு என்பது...

ஜேஆர்: (குறுக்கிட்டு) அது மட்டுமல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த சிலருடனும் அதிகாரப்பங்கீடு பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இப்போது கொடுத்துள்ள யோசனைகளுக்கு எங்கள் பதிலைச் சொல்லப்போகிறோம். அந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

சோ: மிதவாதிகள் மீது சுமத்தப்படும் ஏமாற்றங்கள்?

ஜே. ஆர்: யாரால் சுமத்தப்படுகின்றது?

சோ: சிறிலங்கா அரசினால்.

ஜே. ஆர்: என்னே ஏமாற்றம்.

சோ: சர்வகட்சிமகாநாட்டு ஆலோசனைகளினால்பயனேதும் இல்லை என்றாகிவிட்டது.

ஜே. ஆர்: அவர்கள் தானே (கூட்டணி) நிராகரித்தார்கள்.

சோ: நீங்கள் கூட 'சி' அனுபந்தத்தில் கூறப்பட்ட யோசனைகளைக் கைவிட்டு விட்டீர்கள் என்று திரு அமிர்தலிங்கம் சொல்லுகிறார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சொல்லி இருக்கிறார்.

ஜே. ஆர்: இல்லை. சர்வகட்சி ஆலோசனைகளில் பேசப்படவேண்டிய குறிப்புகளில் அது இருந்தது. எங்களுடைய இறுதியான யோசனைகள் 'சி' அனுபந்தத்தில் காணப்பட்டவைதான்.

சோ; ஆனால் நீங்களே 'சி' அனுபந்தத்தில் உள்ள யோசனை பற்றி கூறுகையில் உங்களுடைய எண்ணங்கள் உரத்த சிந்தனைகள் தானென்றும் உங்களுக்கே அதில் அவ்வளவாக நம்பிக்கையில்லாது போல் பேசினீர்கள், என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொல்லியுள்ளார்.

ஜே. ஆர்: திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவா? அவருக்கு என்ன தெரியும். அவர்தான் அங்கு இல்லையே!

உடன்பாடு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உறுதியாகவலியுறுத்திஉள்ளது வடக்கு-கிழக்கு இணைப்பின்றி நாம் வேறுயோசனையை எவரிடமும் முன்வைக்கவில்லை''.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச)

பலியானோருக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கொக்கிளாய் இராணுவ முகாம்மீதான தாக்குதல் சம்பவத்தில் பலியான தமது இயக்கத்தைச்சேர்ந்த 16 போராளிகளுக்கும் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' அஞ்சலி செலுத்திச் சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளன.

கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின்போது பலியான 16 விடுதலைப் புலிகளுக்குவீரவணக்கங்கள் என்று அச்சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

பருத்தித்துறை நிலைமை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் நீடித்து வரும் பதற்றநிலையால் அங்கு இயங்கிவந்த மக்கள் வங்கிக் கிளை, நெல்லியடி ப. நோ. கூ. சங்கக் கட்டிடத்தில் இம்மாதம் 17ம் திகதி முதல் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் ஆயுதப்படையினரின் தாக்குதல் சம்பவங்களினால் அங்குள்ள அரச திணைக்களங்கள், வங்கிக் கிளைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அங்கு செல்வதற்கு அச்சம்கொண்டுள்ளதுடன் பொதுமக்களும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறையில் உள்ள பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்வது வெகுவாகக் குறைந்துள்ளதாம். [மா]

அபிவிருத்தி கண்காட்சி 21ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக இயற்கைவிஞ்ஞானமன்ற ஆதரவில் சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது இம்மாதம்21, 22, 24ஆம் திகதிகளில் இக்கண்காட்சி நடைபெறும். இக்கண்காட்சியில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், மருத்துவம், இயற்கை வளங்கள் ஆகியவை முக்கிய இடத்தை வகிக்கும்.

பாடசாலை மாணவர்கள் வெள்ளிக்கிழமை 21ம் திகதி இக்கண்காட்சியை பார்வையிட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன மாணவர்கள், பொதுமக்கள், ஆய்வாளர்களுக்கு இக்கண்காட்சி பெரும் உதவியாக அமையும் என்று அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

வெலிக்கடை கைதிகள்

பரீட்சைக்குஅனுமதிக்குமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை

(கொழும்பு)

'தீவிரவாதிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இருநூற்றி எழுபத்தைந்து சந்தேக நபர்கள் சிறைச்சாலையிலிருந்து கொண்டே க. பொ. த. (சாதாரணம்), க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைகளுக்குத் தோற்ற அனுமதிக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

சிறையிலிருக்கும் காலத்தில் பரீட்சைக்கான பாட ஆயத்தங்களைச் செய்ததாகவும், தாம் பரீட்சைக்கு அமரவிரும்புவதாகவும் ஜனாதிபதிக்கு மேற்படி 'கைதிகள்' சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்துள்ளனர்,

பிலிப்பைன்ஸ் தேர்தல்

சட்டமறுப்புக்கு ஆயர்கள் ஆயத்தம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எந்நேரத்திலும் அறிவிக்கப்படலாம் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்ற அதே வேளையில் ஒழுங்கீனமான விதத்தில் தேர்தல் முடிவுகள் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை நடாத்துவதென பிலிப்பைன்ஸிலுள்ள கத்தோலிக்க ஆயர்கள் தீர்மானித்துள்ளனர்.

மார்க்கோஸினது ஆட்சியின் கீழ் கத்தோலிக்க திருச்சபை பலஇடர்ப்பாடுகளுக்குள்ளானதும், திருமதி அக்கினோவுக்கு ஆதரவாகத் தேர்தலின்போது பல திருச்சபை ஊழியர்கள் உதவிபுரிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சென்னை வானொலியில் திருமுறைகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் வேண்டுகோளையேற்று அகில இந்திய வானொலியின் சென்னை வானொலி நிலையத்தினர் பக்தி மலர் என்ற நிகழ்ச்சியில் திருமுறைப்பாடல்களை ஒலிபரப்பி வருகின்றனர். தமிழகத்தின் தலைசிறந்த ஓதுவார்கள் மூலம் இத்திருமுறைப் பாடல்கள் பாடப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. கடந்த 9ந் திகதி ஞாயிறு இசைவாணர் சுவாமி தண்டபாணி இத்திருமுறைப் பாடல்களைப்பாடினார். இத்திருமுறைப்பாடல்கள்இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிவரை ஒலிபரப்பப்படுகின்றன.

அ. இ. திருமுறை மன்றத்தின் வேண்டுதலை ஏற்றுச் சென்னை வானொலி நிலையம் தேவாரப் பண்இசைப் பயிற்சி வகுப்பினை முன்புநடாத்தியது குறிப்பிடத்தக்கது மேற்படி மன்றத்தின் பணியைப் பாராட்டி சென்னை வானொலி நிலையம் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone [illegible]

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வளவினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பரமேஸ்வரன் ஆலயத்தின் இராஜகோபுர நிர்மாணப் பணிகள் இன்று காலை 8-30-க்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

கோபுர நிர்மாணப் பணிகளுக்கான நிதியினை இராமநாதன் நம்பிக்கைநிதிக்குப் பொறுப்பாகவிருக்கும் பரமேஸ்வரன் ஆலய அறங்காவற்குழுவினர் வழங்கவுள்ளனர். கோபுரத்தை நிர்மாணிக்குப் பொறுப்பை பிரபல சிற்பாசாரியாரான அராலியூர் அ. தில்லையம்பலம் ஏற்றுள்ளார்.

புற்றுநோய் பற்றிய சிறப்புரை

[யாழ்ப்பாணம்]

புற்றுநோய் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு யாழ் கல்வித்திணைக்களத்தின் கலாசாரப்பிரிவின் ஆதரவில்இன்று நடைபெறும்.

யாழ். பிரதிப்பிரதேச பணிப்பாளர் (சௌக்கிய சேவை) திரு. எம் ஜெகநாதனின் மேற்படி சிறப்புரை காலை 11 மணிக்கு நல்லூரிலுள்ள கல்வித்திணைக்கள மாநாட்டு மண்டபத்தில்நடைபெறும்.

தென்னாபிரிக்கா மீது இந்தியா கடும் போக்கு

(புதுடில்லி)

தென்னாபிரிக்காவுக்குஎதிராக எதுவித தயக்கமும் இன்றி கட்டாய பொருளாதாரத்தடைகளை விதிக்கவேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் கமிஷனின் கூட்டத்தில் பேசிய பாரதத்தின் தூதுக்குழுத்தலைவர் டாக்டர் குர்தியால் சிங் இக்கோரிக்கையை விடுத்தார்.

தென்னாபிரிக்க அரசு ஐக்கிய நாடுகளின் உறுதிப்பாட்டைக் குலைக்காமல் இருக்கும் வகையிலும் நமீபியாவுக்கு சுதந்திரம் பெற்றுத்தரவும் வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினர். (ச)